**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 163** **நாள் : 21.10.2018**

பருவமழை கண்காணிப்பு அலுவலர்களுக்கான கள ஆய்வு கூட்டம் மரியாதைக்குரிய தமிழ்நாடு அரசு தலைமை செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 20.10.2018 அன்று தலைமை செயலக கூட்டரங்கில் நடைபெற்றது. இதில், தலைமை செயலாளர் அவர்கள் மண்டல அளவில் பருவமழைக்கால தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ய கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய குடிமைப்பணி அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் பருவமழைக்கால நடவடிக்கைகளோடு, டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளையும், கண்காணிக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையின் சார்பில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு குறித்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்பு அலுவலரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அரசு கூடுதல் முதன்மை செயலாளர் டாக்டர். அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2018) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அண்ணாநகர் மண்டலம் வார்டு 101 அரசு சித்த மருத்துவ கல்லூரி வளாகம், ஸ்கைவாக் வணிக வளாகம், தேனாம்பேட்டை மண்டலம் வார்டு 110 புஷ்பா நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதி, லேடி ஆண்டாள் பள்ளி புதிய கட்டுமான வளாகம், வார்டு 111 டி.பி.ஐ. வளாகம், கோடம்பாக்கம் மண்டலம் வார்டு 127 கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் நேரில் சென்று அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிகளை ஆய்வு செய்தார்கள் . மேலும், அண்ணா நகர் மண்டலம் அரசு சித்த மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்றுவரும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கண்காணிப்பு அலுவலர் அவர்கள் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

ஆய்வின்போது, கண்காணிப்பு அலுவலர் அவர்கள், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பொழுது போக்கு மையங்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், புதிய கட்டுமான கட்டடங்கள் மற்றும் அனைத்து குடியிருப்பு, வணிக வளாகப் பகுதிகளில் கொசு ஒழிப்பு நடிவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், அனைத்து வீடுகளிலும் உள்ள கிணறு, மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை காற்றுபுகா வண்ணம் மூடி வைக்கவும் சுத்தமான தண்ணீர் தேங்கா வண்ணம் சுற்றுபுறத்தை தூய்மையாக பராமரித்துக்கொள்ள பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் கொசு உற்பத்தியை ஏற்படுத்தும் தேவையற்ற பொருட்களான டயர், தேங்காய் ஓடுகள், ஆட்டுக்கல், உரல், மூடப்படாத டிரம்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், பழுதடைந்த வாகன உதிரி பாகங்கள் போன்றவற்றை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், அலுவலர்களுக்கு

அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர்.சுபோத் குமார் இ.ஆ.ப., அவர்கள், மண்டல அலுவலர் திரு.எஸ்.நடராஜன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க.மண்டலத்தில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை வளர்ச்சி மேலாண்மை இயக்குநர் திரு.சி.காமராஜ் இ.ஆ.ப., அவர்களும் அண்ணாநகர் மண்டலத்தில் மருத்துவ வாரிய தேர்வாணையத் தலைவர் திரு.வி.ராஜாராமன் இ.ஆ.ப., அவர்களும், தேனாம்பேட்டை மண்டலத்தில் தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையாளர் திரு.ஷன்சோங்கம் ஜடக் சிரு இ.ஆ.ப., அவர்களும் அடையாறு மண்டலத்தில் தொழில் துறை துணை செயலாளர் திரு. கே. பாலசுப்பிரமணியம் இ.ஆ.ப., அவர்களும் சோழிங்கநல்லூர் மண்டலத்தில் மாநில ஊரக சுகாதார திட்ட இயக்குநர் டாக்டர். தாரேஸ் அகமது இ.ஆ.ப., அவர்களும் பருவமழை தடுப்பு நடவடிக்கைகளோடு டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளையும் இன்று (21.10.2018) ஆய்வு செய்தார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**